# 8. மணிபல்லவத்துத் துயருற்ற காதை

[நிலைமண்டில ஆசிரியப்பா]

—மணிமேகலை மணிபல்லவத்துத் துயிலெழுந்து துயருற்ற பாட்டு—

[மணிபல்லவத் தீவிலே தனியாக விடப்பெற்ற மணிமேகலை, கண்விழித்ததும், தன் தனிமையினை அறிந்து துன்புற்று அழத் தொடங்கினாள். அவள்முன் தருமபீடிகை ஒன்று அவ்வேளை தோன்றுகின்றது ]

### 1. கண் விழித்தாள்

ஈங்கிவள் இன்னணம் ஆக, இருங்கடல்
வாங்குதிரை உடுத்த மணிபல் லவத்திடைத்
தத்துநீர் அடைகரைச் சங்குழு தொடுப்பின்
முத்துவிளை கழனி, முரிசெம் பவளமொடு
விரைமரம் உருட்டும் திரையுலாப் பரப்பின்,
ஞாழல் ஓங்கிய தாழ்கண் அசும்பின்,
ஆம்பலும் குவளையும் தாம்புணர்ந்து மயங்கி;
வண்டுண மலர்ந்த குண்டுநீர் இலஞ்சி;
முடக்காற் புன்னையும், மடற்பூந் தாழையும்,
வெயில்வரவு ஒழித்த பயில்பூம் பந்தர்;
அறல்விளங்கு நிலாமணல் நடுமலர்ப் பள்ளித்
துஞ்சுதுயில் எழூஉம் அஞ்சில் ஓதி—

புகார் நகரத்திலே, சுதமதியானவள் இவ்வண்ணமாகத் துன்புற்றிருக்கப், பெருங்கடலின் வளைந்த திரைகளாற் சூழப்பெற்ற மணிபல்லவத்தீவிலே நிகழ்ந்ததனையும் நாம் காண்போம். அலைநீர் தத்திச் சென்றுகொண்டிருக்கும் அடைகரைப் பாங்கிலே, சங்கினம் விழாக்கொண்டு உழுகின்ற இடங்களிலே, முத்துக்கள் விளைகின்ற வயல்கள் விளங்கும் சிதறிக்கிடக்கின்ற செய்பவளத் துண்டுகளுடனே, சந்தனம் முதலிய மணமரங்களின் கட்டைகளையும், அலைகள் அவ்விடத்தே உருட்டித் தள்ளியிருக்கும் அத்தகைய அலைகள் உலாவுகின்ற கடற்கரைப் பரப்பிலே,

புலிநகக் கொன்றை மரமானது உயரமாக வளர்ந்திருக்கின்ற தாழ்ந்த இடத்தையுடைய சேற்றிலே, ஆம்பலும் குவளையும் ஒன்றுடனொன்று நெருங்கிக் கலந்து விளங்கும். வண்டுகள் உண்ணும்படியாக மலர்கள் மலர்ந்திருக்கின்ற ஆழமான நீரினையுடைய பொய்கைக்கரையிலே வளைந்த அடிமரத்தையுடைய புன்னையும், மலர்செறிந்த தாழை மரங்களும், வெயிலின் வரவை ஒழித்தனபோல அழகாகப் பந்தரிட்டிருக்கும். அவற்றின் நிழற்கீழ், அறல்பட்டு விளங்குகின்ற நிலாப் போன்ற வெண்மணற் பரப்பாகிய நறுமலர்ப் பள்ளியிலே கிடந்து உறங்கிய உறக்கத்தினின்றும், அழகிய சிலவாகிய கூந்தலை உடைய மணிமேகலையும் கண்விழித்து எழுந்தனள்.

### 2. உவவனத்து ஓரிடமோ?

காதற் சுற்றம் மறந்து கடைகொள,
வேறிடத்துப் பிறந்த உயிரே போன்று,
பண்டறி கிளையொடு பதியும் காணாள்;
கண்டறி யாதன கண்ணிற் காணா
நீல மாக்கடல் நெட்டிடை அன்றியும்
காலை ஞாயிறு கதிர்விரித்து முளைப்ப,
உவவன மருங்கினில் ஓரிடங் கொல், இது!"

அன்பினையுடைய தனனைச் சார்ந்த சுற்றத்தினரை மறந்துவிட்டு, ஊழ்வினையானது வந்து தன் முடிவைக் கொள்ளவும், அவரைப் பிரிந்து இறந்துசென்று வேறோர் இடத்திலே பிறந்திருக்கின்றதான ஓர் உயிரினைப் போன்ற நிலையிலே, மணிமேகலை அப்போது இருந்தாள். முன்பு, தான் அறிந்திருந்த தன் சுற்றத்துடனே, தன்னுடைய ஊரினையும் எதிரே காணாதவளாயினாள். முன்னர்க கண்டு அறியாதன வெல்லாம் தன் கண்ணெதிரே தோன்றுதலையும் கண்டாள். நீலவண்ணப் பெருங்கடலான நெடிய இடத்தினை அல்லாமலும், அதன்கண் காலை இளஞாயிறு தன் கதிர்களைப் பரப்பிக் கொண்டு எழுவதனையும் கண்டாள். 'உவவனப் பாங்கிலே இதுவும் ஓர் இடம் போலும்!' என்று ஐயுற்றாள்.

### 3. திருவே வா!

சுதமதி ஒளித்தாய்! துயரம் செய்தனை!
நனவோ, கனவோ? என்பதை அறியேன்!
மனநடுக் குறூஉம்; மாற்றம் தாராய்!
வல்லிருள் கழிந்தது; மாதவி மயங்கும்!
எல்வளை! வாராய், விட்டகன் றனையோ?

விஞ்சையில் தோன்றிய விளங்கிழை மடவாள்
வஞ்சம் செய்தனள் கொல்லோ? அறியேன்!
ஒருதனி அஞ்சுவென்; திருவே, வா" வென—

"சுதமதி! நீ எங்கே ஒளிந்துள்ளனையோ? எனக்குத் துயரம் வருமாறு செய்தனையே? இது நனவோ அன்றிக் கனவோ என்பதையும் யான் அறிகின்றிலேனே? என் மனமோ நடுக்கமுறுகின்றது. எனக்கொரு மறுமொழியும் தாராயோ? வலிதான இரவுப்பொழுதும் கழிந்தது. என்னைக் காணாது மாதவியும் மயக்கங்கொள்வாளே? ஒளி பொருந்திய வளையுடையவளே! இங்கு வாராயோ!" (அவள் வாராதும் மறுமொழி தாராதும் போக) அன்றி, நீ என்னை இவ்விடத்தே விட்டுத்தான் போய்விட்டனையோ? வானத்திலிருந்து தோன்றிய விளக்கமுற்ற அணிகலன்களை யுடைய இளையவள்தான் இங்ஙனமொரு வஞ்சனையினைச் செய்துவிட்டாளோ? எதனையும் அறிகின்றிலேனே? ஒருமை யான இந்தத் தனிமைக்கு அஞ்சுகின்றேனே! என் செல்வமே வாராயோ? எனச் சுதமதியை நினைந்து புலம்பினாள்.

### 4. பாங்கினம் காணாள்

திரைதவழ் பறவையும்; விரிசிறைப் பறவையும்
எழுந்துவீழ் சில்லையும், ஒடுங்குசிறை முழுவலும்,
அன்னச் சேவல் அரசன் ஆகப்,
பன்னிறப் புள்ளினம் பரந்தொருங்கு ஈண்டிப்,
பாசறை மன்னர் பாடி போல
விரிநீர்ப் பரப்பின் எதிரெதிர் இருக்கும்
துறையும், துறைசூழ் நெடுமணற் குன்றமும்,
யாங்கணும் திரிவோள்— பாங்கினம் காணாள்—

அலையிலே தவழ்ந்து செல்லும் பறவைகளும், விரித்த சிறைகளுடைய பறவைகளும், எழுந்தெழுந்து மீண்டும் படிகின்றதான சில்லையும், சிறையொடுக்கியவாறே இருக் கின்ற முழுவலுமாகிய பல்வேறு வண்ணமுடைய புள்ளினங் களும் பரவி ஒருங்கே கூடியிருக்கவும், அன்னச் சேவலானது அரசனைப்போல அவற்றுக்கிடையே அமர்ந்திருக்கவும், பாசறையிடத்தேயுள்ள மன்னரின் பாடிவீட்டினைப் போல வீசுகின்ற நீர்ப்பரப்பினிடத்தே எதிரெதிரே பாடியிருக்கின்ற கடற்றுறையும், அத்துறையினைச் சூழ்ந்துள்ள நெடிய மணற் குன்றமுமாகிய எவ்விடத்தும் சுற்றித் திரிந்தாள். எங்குமே தன் தோழியருள் எவரையும் காணாதவளு மாயினாள்.

### 5. ஐயாவோ என்றனள்

குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழ
அரற்றினள்; கூஉய்; அழுதனள் ஏங்கி;
வீழ்துயர் எய்திய விழுமக் கிளவியின்,
தாழ்துயர் உறுவோள் தந்தையை உள்ளி,
'எம்மிதிற் படுத்தும் வெவ்வினை உருப்பக்,
கோற்றொடி மாதரொடு வேற்றுநா டடைந்து,
வைவாள் உழந்த மணிப்பூண் அகலத்து—
ஐயாவோ!'' வென்று அழுவோள் முன்னர்—

பூங்கொத்துக்களைக் கொண்டிருந்த கூந்தலானது குலைந்து பின்புறமாக வீழ்ந்துகிடக்க மணிமேகலை கூவி அரற்றினாள். ஏங்கி ஏங்கி அழுதாள். ஆழமான துயரத்தினை அடைந்த துன்பத்து மிகுதியின் காரணமாகப் பெருந்துயரம் அடைந்த அவள், தன் தந்தையை நினைந்தாள். 'எம்மை இவ்வாறு துன்புறுத்தும் வெவ்வினை நேர்ந்திடுமாறு, கோற்றொழிலினையுடைய வளையணிந்த அன்னை கண்ணகியோடு, வேற்று நாட்டினை அடைந்து, கூரிய வாளினாலே வெட்டுண்டு துயரடைந்த, மாணிக்கப்பூண்கள் அணிந்த மார்பகத்தினையுடைய என் ஐயாவோ!' என்று அழுபவளின் முன்னாக—

### 6. தரும பீடிகை

விரிந்திலங்கு அவிரொளி சிறந்து, கதிர் பரப்பி,
உரைபெறு மும்முழம் நிலமிசை ஓங்கித்
திசைதொறும் ஒன்பான் முழநிலம் அகன்று.
விதிமாண் ஆடியின் வட்டங் குயின்று,
பதும சதுர மீமிசை விளங்கி,
'அறவோற்கு அமைந்த ஆசனம்' என்றே,
நறுமலர் அல்லது பிறமரம் சொரியாது;
பறவையும் முதிர்சிறை பாங்குசென்று அதிராது;
தேவர்கோன் இட்ட மாமணிப் பீடிகை,
பிறப்பு விளங்கு அவிரொளி அறத்தகை யாசனம்,
கீழ்நில மருங்கின் நாகநா டாளும்
இருவர் மன்னவர் ஒருவழித் தோன்றி
எமதீ தென்றே எடுக்கல் ஆற்றோர்,
தம்பெரும் பற்று நீங்கலும் நீங்கார்,

செங்கண் சிவந்து நெஞ்சுபுகை உயிர்த்துத்
தம்பெருஞ் சேனையொடு, வெஞ்சமம் புரிநாள்,
'இருஞ்செரு ஒழிமின்; எமதீது' என்றே
பெருந்தவ முனிவன் இருந்தறம் உரைக்கும்,
பொருவறு சிறப்பிற் புரையோர் ஏத்தும்
தருமபீடிகை—தோன்றியது ஆங்கென்.

பரந்து விளங்குகின்ற பேரொளியினை மிகுதியாக உடையதாகி, ஒளிக்கதிர்களை எப்புறமும் பரப்பிக்கொண்டிருப்பதாகப், புகழமைந்த மூன்றுமுழ அளவிற்கு நிலத்திற்கு மேலே உயர்ந்தும், நாற்றிசைப்புறத்தும் ஒன்பதுமுழ அளவினுக்கு இடமகன்றும், முறைமையோடு மேன்மை பெற்றுள்ள பளிங்கினாலே வட்டமாகச் செதுக்கப்பெற்றும், பதுமசதுரம் மேலே விளங்கவும் அமைந்திருந்தது ஒரு தரும பீடிகை.

'அறவோனாகிய புத்ததேவனுக்கு அமைந்த ஆசனம் அது என்றே, நறுமலர்கள் அல்லாத பிறவகை மலர்களை மரங்களும் அதன்மேற் சொரியாவாக நின்றிருந்தன. பறவைகளும் அதனருகே சென்று சிறையொலித்தல் செய்யா வாயிருந்தன. தேவர்கோமானால் இடப்பெற்ற சிறந்த மாணிக்கத்தால் அமைந்த பாதபீடிகை அது. காண்போரது பழம்பிறப்பு விளங்குவதற்குச் செய்கின்ற அறத்தன்மை பொருந்திய இருக்கைப் பீடமும் அதுவாகும்.

இந்தச் சம்புத்தீவிற்குக் கீழ்த்திசைக் கண்ணதான நாக நாட்டினை ஆள்வோரான மன்னவர் இருவரும், ஒரே கருத்தினராக, ஒரேபொழுதிலே அவ்விடத்தே தோன்றி, அதனை எடுத்துப் போக முயன்றனர். 'எம்முடையது' 'எம்முடையது' என உரிமை பேசி எடுக்க முயன்றும் எடுக்க இயலாதவராயினர். ஆயினும், தம்முடைய பெரிய பற்றானது நீங்காதவர்களாகச் சிவந்த தம் கண்கள் சினத்தினாலே மேலும் சிவப்படைய, நெஞ்சம் கொதிக்க, வெய்தாகப் பெருமூச்சுவிட்டுத், தம் பெருஞ்சேனையோடும் பெரும்போரினையும் அங்கே தொடங்கினார்கள்—

அந்த நாளிலே, 'நீவிர் நுமது பெரும் போரினைக் கைவிடுவீர்களாக; இஃது எமக்குரியது' என்று கூறிப் பெருந்தவமுனிவனாகிய புத்ததேவன், அதன்கண் அமர்ந்து அறம் உரைப்பானாயினான். அத்தகைய ஒப்பற்ற சிறப்பினையுடைய, உயர்ந்தோர் போற்றும் தரும பீடிகை அவ்விடத்தே மணிமேகலையின் கண்களுக்குத் தோன்றியது என்க. (தரும பீடிகை—அறத்தவிசு யாசனம்.)

தமிழ் இலக்கியம் மக்கள் பதிப்பு

# மணிமேகலை

[புதிய பதிப்பு]

புலியூர்க் கேசிகன்

தெளிவுரையுடன்

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

முதற் பதிப்பு: மார்ச், 1961
இரண்டாம் பதிப்பு: ஜூன், 1963
மூன்றாம் பதிப்பு: டிசம்பர், 1965
நான்காம் பதிப்பு: நவம்பர், 1967
ஐந்தாம் பதிப்பு: ஜனவரி, 1971
ஆறாம் பதிப்பு: அக்டோபர், 1976
ஏழாம் பதிப்பு: நவம்பர், 1980
எட்டாம் பதிப்பு: ஏப்ரல், 1987
ஒன்பதாம் பதிப்பு: 1994

பதிப்புரிமை: புலியூர்க் கேசிகன்

விலை ரூ. 50.00

Printed at

**SRI YESES PRINT HOUSE**
4 & 5, Thanappa Chetty Street,
Triplicane, Madras - 600 005.
**Phone 833231**

# மணிமேகலை

புலியூர்க் கேசிகன்

தெளிவுரையுடன்